


மிகப்பெரிய வெற்றி அது. கற்பனையே செய்ய முடியாத வெற்றி. நினைத்துப் பார்த்திராத வெற்றி. ஹமாஸே நினைத்திருக்கவில்லை என்பதுதான் இதில் விசேஷம். ஹமாஸ் தலைவர்கள் இரவு பகலாக டீ குடித்துக் கொண்டே பேசினார்கள். பேசினார்களா? பேசிப் பேசி மாய்ந்து போனார்கள். எப்படிக் கிடைத்தது இந்த வெற்றி? ஆயுதங்களுக்கு அவசியமே நேராத ஒரு தேர்தல். மிக அமைதியாக நடந்தது. வெறும் வெங்காய வெடிச் சத்தம் கூடக் கிடையாது. அதிர்ஷ்டவசமாக இஸ்ரேலும் புதிய திருவிளையாடல் ஏதும் நிகழ்த்தாமல் இருந்துவிட்டது.

வரிசையில் நின்று வாக்களித்த மக்களைச் சொல்லவேண்டும். இஸ்ரேலும் அமெரிக்காவும் அதன் அடிப்பொடி நாடுகளும் வார்த்தைக்கு வார்த்தை தீவிரவாத இயக்கம், பயங்கரவாத இயக்கம், கொலைகார இயக்கம் என்று சொல்லிச் சொல்லி உருவேற்றிக்கொண்டிருந்தாலும், இடது கையால் ஒதுக்கிவிட்டு வாக்களித்த மக்கள். எத்தனை நம்பிக்கை!

நல்லது. இனி, ஜாக்கிரதையாகக் காய்கள் நகர்த்த வேண்டும். அடாவடி அமைப்பு என்னும் முகமூடியைத் தாற்காலிகமாகவாவது கழற்றி வைத்துவிட வேண்டியதுதான். இப்போதைக்கு அந்த முகமூடி தேவைப்படாது. வேறு ஒரு புதிய அடையாளம் கிடைத்திருக்கிறது. பளபளப்பானது. கௌரவமானது. மேலும், உலக அரங்கில் பிற தேசங்களுடன் கால் மேல் கால் போட்டு உட்கார்ந்து பேசமுடியும் இனிமேல். எப்படியும் இஸ்ரேலை இடுப்பில் முடிந்துகொண்டு ஆயுதம் தூக்காமல் இருக்கமுடியாதுதான். ஆனால் நடக்கிற அராஜகங்களை உலக நாடுகளுக்கு எடுத்துச் சொல்லி நியாயம் கேட்க, இந்த ஆட்சி வாய்ப்பு உதவும்.

என்ன செய்யவேண்டும்? இப்போதைய உடனடித் தேவை, புதிய திட்டங்கள், புதிய போராட்ட உத்திகள், திட்டங்கள் மக்களுக்கு. போராட்டம் இஸ்ரேலுக்கு.

ஹமாஸ் உயர் மட்டக் குழு யோசித்துக்கொண்டிருந்த அதே சமயம், அமெரிக்க அதிபர் ஜார்ஜ் புஷ்ஷூம் கவலைப்பட்டுக்கொண்டிருந்தார். சற்றும் எதிர்பாராத நெருக்கடி இது. ஹமாஸ் தேர்தலில் நிற்கும் என்று யார் கண்டது? நின்றதோடு இல்லாமல் ஜெயிக்க வேறு செய்யும் என்று யாராவது கணித்திருப்பார்களா? துப்புக்கெட்ட இஸ்ரேல் எப்படியோ கோட்டைவிட்டு விட்டது. தடுத்திருக்க வேண்டாமா? என்னத்தையாவது செய்து தேர்தல் தில்லாலங்கடிகள் ஆடியிருக்க வேண்டாமா? அட, தேர்தலையே ஒத்திப்போட்டிருக்க முடியாதா என்ன? தத்திகள். வெறும் தத்திகள். ஆனாலும் அவரது சிஷ்ய தத்திகள். வெறுமனே திட்டிவிட்டுப் போய்விட முடியாது.

தவிரவும், மிக முக்கியமான இன்னொரு கேள்வி இருக்கிறது. இனி ஹமாஸை எப்படி அணுகுவது? தீவிரவாத அமைப்பாகவா? அரசியல் கட்சியாகவா?

அமெரிக்காவில் ஹமாஸ் ஒரு தடை செய்யப்பட்ட இயக்கம். அதே இயக்கம்தான், இப்போது

பாலஸ்தீனை ஆளப்போகிறது. எனில் தடை செய்யப்பட்ட அரசும் கூடவா? என்ன அபத்தம்!

அதையெல்லாம்விட ஜார்ஜ் புஷ்ஷின் பெருங்கவலை, ஹமாஸை ஓர் அரசியல் கட்சியாக நினைத்துப் பார்க்கக்கூட முடியவில்லையே என்பது. அவரளவில் ஹமாஸ் என்பது நேற்று வரை மடித்துக் கட்டிய லுங்கியுடன் உதார் விட்டுக்கொண்டிருந்த கபாலிகளின் கூட்டம். இனி, அவர்களும் கோட், சூட், டை எல்லாம் கட்டிக்கொண்டு லேப்டாப்புடன் மீட்டிங்குகளுக்கு வருவார்கள். கால் மேல் கால் போட்டு உட்காருவார்கள். சட்டம் பேசுவார்கள்.

கூடாது. ஹமாஸுக்கு இந்த இமேஜ் அதிகம். தவிரவும் ஆடம்பரம். அவர்களை அடக்கியாக வேண்டும். உடனே, உடனே! ஆனால், அதற்கு முன்னால் இன்னொரு வேலை பாக்கியிருக்கிறது. ஹமாஸ் விஷயத்தில் அமெரிக்காவின் நிலைப்பாடு என்ன என்பதை அறிவித்தாக வேண்டும்.

செய்தியாளர்களை உடனடியாகக் கூட்டினார் புஷ். 'அமெரிக்காவின் முடிவு இதுதான். ஹமாஸுடன் எங்களால் ஒட்டி உறவாட முடியாது. இந்த நிமிடம் வரை ஹமாஸ் ஒரு தீவிரவாத அமைப்பு. தற்கொலைப் படைகள், கொலைகாரப் படைகள் என்று வளர்ந்து நிற்கிறது. அப்படிப்பட்ட ஓர் அமைப்புடன் எப்படி நாங்கள் உறவாட முடியும்? தேர்தலில் நின்று வெற்றி பெறுவது பெரிய விஷயமல்ல. முதலில் அவர்கள் தங்களது தீவிரவாதச் செயல்பாடுகள் அத்தனையையும் நிறுத்தி வைக்க வேண்டும். தவிரவும், இஸ்ரேலை அங்கீகரிக்க வேண்டும்.'

புஷ்ஷின் அந்தப் பத்திரிகையாளர் சந்திப்பு அறிக்கை, இஸ்ரேலிய அரசுக்கு முன்னதாகவே ஃபேக்ஸ் செய்யப்பட்டிருந்தது. எனவே, வார்த்தைகளை மட்டும் சற்றே மாற்றிப்போட்டு அப்படியே ஒப்பித்தார் இஸ்ரேலிய அதிபர் மோஷே காட்ஸவ். ஹமாஸுடன் நாங்கள் உட்கார்ந்து பேச வேண்டுமென்றால், இஸ்ரேல் என்னும் தேசத்தை, முதலில் ஹமாஸ் அங்கீகரிக்க வேண்டும். இஸ்ரேலின் இருப்பையும் இஸ்ரேலியர்களின் போராட்டத்தையும் ஹமாஸ் மதிக்க வேண்டும். தீவிரவாதத்தைக் கைவிட வேண்டும். சமர்த்துச் சர்க்கரைக் கட்டிகளாக மாற வேண்டும்.

ஒரு கையில் அமெரிக்காவின் அறிக்கை. மறு கையில் இஸ்ரேலின் அறிக்கை. இரண்டையும் ஒப்பிட்டுப் பார்த்துப் பெருமை பொங்கச் சிரித்தது ஹமாஸ். மவனே, வா. உங்கள் இருவரையும் இனி ஒரு கை பார்க்கிறேன்.

சற்று கவனமாகப் பார்த்தால் ஒரு விஷயத்தைப் புரிந்து கொள்ள முடியும். அமெரிக்கா, இஸ்ரேல் இரண்டுமே ஹமாஸ் விவகாரத்தில் கொஞ்சம் அடக்கித்தான் வாசித்திருக்கின்றன. பயம் என்று சொல்லிவிட முடியாது. ஆனால், ஒரு புதிய அசௌகரியத்தை அவர்கள் சந்திக்க வேண்டியிருந்தது. நேற்று வரை அவர்கள் எதிர்த்துக்கொண்டிருந்தது ஒரு தீவிரவாத அமைப்பை. இனி, அவர்கள் அணுக வேண்டியது ஒரு தேசத்தின் அரசியல் தலைமையை. இருவருக்குமே அது தெரிந்திருந்தது.

ஓர் ஆச்சரியம். உலகமே ஹமாஸுக்கு எதிராகத் திரும்பிக் கொண்டிருந்த சூழலில் ஹமாஸை ஆதரிக்க முன் வந்த ஒரே நாடு ரஷ்யா. ஹமாஸின் சொத்துக்களை முடக்குவது, அவர்களுக்கு ஊக்கத்தொகை அளிப்பதை நிறுத்திக்கொள்வது போன்ற முடிவுகளை அமெரிக்காவும் ஐரோப்பிய ஒன்றியமும் திரும்பப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்றார் ரஷ்ய அதிபர் விளாதிமிர் புதின். ஆயிரம் காரணங்கள் சொன்னாலும், ஹமாஸ் ஓர் அரசியல் சக்தி. நமக்குப் பிடிக்கிறதோ இல்லையோ, அவர்களை மதிக்கத்தான் வேண்டும் என்றார் புதின்.

சொல்வதோடு நிறுத்திக்கொள்ளாமல் மார்ச் 2006-ல் சில முக்கிய ஹமாஸ் தலைவர்களை வெற்றிலை பாக்கு, மலை வாழைப்பழம் எல்லாம் வைத்து மாஸ்கோவுக்கு வரவழைத்துப் பேசியது ரஷ்ய அரசாங்கம்.

வெலவெலத்துப் போனது மேற்குலகம். இதென்ன அக்கிரமம்? மக்கள் வோட்டுப்போட்டு

தேர்ந்தெடுத்துவிட்ட பாவத்துக்குக் கொஞ்சநாள் வைத்துக்கொண்டிருந்துவிட்டு ஒழித்துக்கட்டிவிட முடியாதா என்று அமெரிக்கா பார்த்துக்கொண்டிருக்கும்போது, இப்படி கூப்பிட்டு உட்காரவைத்துப் பேச்சுவார்த்தை நடத்த அப்படி என்ன அவசரம்? அல்லது அவசியம்? சீண்டுகிறதா ரஷ்யா? பழைய பனிப்போரின் புதிய புகையா? வாய்ப்பே இல்லையே? ரஷ்யா இப்போது வாலறுக்கப்பட்ட நரி அல்லவா? சர்வதேச விவகாரங்களில் தலையிடும் அளவுக்கு அவர்களுக்கு நேரமும் வசதியும் ஏது? அதுவும் பாலஸ்தீன் விஷயத்தில்? எங்கோ உதைக்கிறதே..

ஐரோப்பிய ஒன்றியம் மட்டும் துணிந்து சில நடவடிக்கைகளை எடுத்தது. முதல் காரியமாக, பாலஸ்தீனத்துக்கு வழங்கிக்கொண்டிருந்த ஊக்கத் தொகையைக் கத்தரித்தது. (ஹமாஸ் வருகைக்கு முன்னால் ஆண்டுதோறும் 500 மில்லியன் டாலர்களை ஐரோப்பிய ஒன்றியம் பாலஸ்தீனத்துக்கு வழங்கி வந்தது).

கையோடு ஒரு நிபந்தனையையும் விதித்தது. 1993-ல் கையெழுத்தான ஓஸ்லோ ஒப்பந்தத்தை ஹமாஸ் மதித்து நடந்து கொள்ள வேண்டும். இஸ்ரேலுடன் உட்கார்ந்து பேசி ஒரு சுமுகமான முடிவுக்கு வந்து சேர வேண்டும். வழக்கம் போல் ஏதாவது போக்கிரித்தனம் செய்தால், டாலர் கிடைக்காது. தொண்டி காலணா கூடக் கிடைக்காது.

ஐரோப்பிய ஒன்றியத்தின் நிபந்தனைகளை சிரத்தையாக பிரிண்ட் அவுட் எடுத்து குப்பைத் தொட்டியில் வீசியது ஹமாஸ். நான் என்ன செய்யவேண்டும் என்று நீ சொல்லாதே. நீ என்ன செய்ய வேண்டும் என்று நான் சொல்கிறேன்.

உதவாக்கரை ஓஸ்லோ ஒப்பந்தம். ஆனால் அதற்காக இஸ்ரேலுடன் உட்கார்ந்து பேசமாட்டோம் என்று நாங்கள் சொல்லவில்லை. பேச்சுவார்த்தைக்கு நாங்கள் சம்மதிக்கிறோம். ஆனால், அதற்கு முன்னால் இஸ்ரேல் சில விஷயங்களைச் செய்ய வேண்டும். மேற்குக் கரையிலும் காஸா முனையிலும், கிழக்கு ஜெருசலேமிலும் வண்டி வண்டியாகக் குவிந்து கிடக்கும் இஸ்ரேலியப் படைகள் உடனடியாக வெளியேற வேண்டும். தவிரவும், சிறை வைக்கப்பட்டிருக்கும் பாலஸ்தீனியர்கள் அத்தனை பேரையும் வெளியில் விடவேண்டும். இதையெல்லாம் செய்துவிட்டு வாருங்கள். பிறகு, பேசுவது பற்றி யோசிக்கலாம்.

ஆடிவிட்டது இஸ்ரேல். ம்ஹும். ஹமாஸை முடக்கியே ஆகவேண்டும். விட்டால், பேசிக்கொண்டே இருப்பார்கள்.

என்ன செய்யலாம்?

ஒரு ஐடியா தோன்றியது. பாலஸ்தீன் பகுதிகளுக்கான தொகையாக 55 மில்லியன் டாலர்கள் இஸ்ரேலின் கஜானாவுக்கு சமீபத்தில்தான் வந்து சேர்ந்திருந்தது. பாலஸ்தீனத்துக்குச் சேர வேண்டிய வரிப்பணம் அது. இஸ்ரேலின் மூலமாகத்தான் வரிப்பணம் பாலஸ்தீனத்தைச் சென்றடையும். அது ஒப்பந்தம். பாலஸ்தீன் அத்தாரிடி என்கிற அமைப்பு உருவானபோதே ஏற்கப்பட்ட ஒப்பந்தங்களுள் ஒன்று. வரி வசூல் வேலையெல்லாம் இஸ்ரேலுடையது. இந்தப் பணத்தைத்தான் முடக்கி வைக்கத் திட்டமிட்டார் இஸ்ரேலின் பிரதமர் இஹூத் ஓல்மர்ட்.

இத்தனை பெரிய தொகையைச் சும்மா முடக்கி வைக்க முடியாதல்லவா? அதனால் ஒரு வலுவான காரணத்தையும் ஓல்மர்ட் குறிப்பிட்டார். ஹமாஸ் போன்ற அமைப்புகள் உயிருடன் இருக்கும் வரை, பாலஸ்தீனம் ஒரு தீவிரவாதப் பிராந்தியமாகத்தான் இருக்கும். எனவே, அவர்களுக்கு இந்தத் தொகையை அளிக்க முடியாது. இதைக் கொடுத்தால் அவர்கள் அரிசிக்குச் செலவழிக்காமல் ஆயுதம் வாங்கிவிடுவார்கள். ரோடு போடவேண்டிய காசில் குண்டுபோடுவார்கள். அட்டூழியம் இன்னமும் அதிகரித்து விடும். ஆகவே பணத்தைத் தரமுடியாது. அவ்வளவுதான்.

இஸ்ரேலின் திடீர் அறிவிப்பைக் கேட்டு ஹமாஸ் கொஞ்சம் மிரண்டது உண்மைதான். இப்படி ஒரு

சவாலைச் சந்திக்க வேண்டியிருக்கும் என்று அவர்களுக்குத் தெரியும். ஆனால் இத்தனை சீக்கிரத்தில் சந்திக்க வேண்டியிருக்கும் என்று அவர்களுக்குத் தெரியவில்லை.

பாலஸ்தீனத்துக்கு இந்த 55 மில்லியன் டாலர்கள் அத்தியாவசியம். இதை நம்பித்தான் அவர்கள் வருடாந்திர பட்ஜெட்டே போடமுடியும். கிட்டத்தட்ட 1,65,000 அரசாங்க அதிகாரிகளுக்கு, ஊழியர்களுக்கு சம்பளம் கொடுக்க வேண்டும். அரசாங்கச் செலவுகளைச் சமாளிக்க வேண்டும். இந்தத் தொகை மட்டும் இல்லாவிட்டால் பாலஸ்தீனத்தின் இயக்கமே முடங்கி விடும்.

ஆஹா! நல்ல வாய்ப்பு! துள்ளிக் குதித்தது இஸ்ரேல். இனி, பாலஸ்தீனத்தின் பொருளாதாரம் சரிந்துவிடும். அதிகாரிகள் தெருவுக்கு வந்து கொடி பிடிப்பார்கள். கோஷங்கள் எழுப்புவார்கள். சம்பளம் தா என்று கூச்சலிடுவார்கள். கடையடைப்பு, வேலை நிறுத்தம், தடியடி, கண்ணீர்ப் புகை என்று தேசமே கொழுந்துவிட்டு எரிய ஆரம்பித்துவிடும்.

எதிர்த்து நிற்க காவல் படை கூட வராது. காரணம், அவர்களுக்குச் சம்பளம் தரக்கூட அரசாங்கத்திடம் காசு இல்லை. கலகம் வெடிக்கும். ஆட்சி கவிழும். தேசமே குட்டிச்சுவராகிவிடும். இத்தனைக்கும் காரணம் ஹமாஸ்தான் என்று எல்லோரும் சொல்லிவிடுவார்கள். நேற்று வரை நன்றாக இருந்தோம். நீ வந்ததால்தான் இப்படி ஆகிவிட்டது என்று தொலைக்காட்சித் தொடர் கதாநாயகியை மாமியார் வீட்டு மனிதர்கள் தூற்றுவது போல் தூற்றுவார்கள்.

போதாது?

இஸ்ரேல் ஏற்கெனவே இரண்டு முறை இப்படி அடாவடி செய்திருக்கிறது. 1991-ல் ஒரு முறை. 1992-ல் மற்றொரு முறை. இரண்டு முறையும் பாலஸ்தீனம் சுருண்டு விட்டது. சரியான நேரத்தில் சர்வதேச நிதி கிடைத்ததால் தப்பித்தது. இந்த முறை சர்வதேச நிதியும் கிடைக்காது. அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றியம் இரண்டும் சல்லிக் காசு தராது. பிழைக்க வேறு வழியே இல்லை. அழிந்தே தீரவேண்டும்.

அவ்வளவுதானா? அதற்குமேல் ஒன்றுமில்லையா? யோசித்தார்கள்.